www.padippakam.com


# செய்திக்கதிர்

பிரான்சுக் கிளை

தமிழீழத் தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வெளிவரும் பத்திரிகை

30-11-1990


## — மூன்று நாட்கள் கடும் சண்டை —
## மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்தது.

கடந்த 22ந் திகதி நள்ளிரவு மாங்குளத்தில் இருக்கும் பாரிய இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்கியழிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தனர். விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குட்பட்டிருந்த இவ் இராணுவ முகாம் மூன்று நாட்கள் தொடர்ந்து நடந்த கடும் சண்டையின் பின் கைப்பற்றப்பட்டது. 24ந்திகதி அதிகாலை 3.15மணியளவில் முகாமிற்குள் விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக நுழைந்தனர். குண்டுவீச்சுக்களை நடாத்திக் கொண்டிருந்த இராணுவ கெலிகாப்டர் ஒன்று போராளிகளின் விமான எதிர்ப்பு பீரங்கித் தாக்குதலினால் கடும் சேதத்திற்குள்ளாகியது. நெருப்பும், புகையும் கக்கியவாறு கெலிகாப்டர் அவசர அவசரமாக வவுனியா சென்று தரையிறங்கியுள்ளது.

இத்தாக்குதலின்போது 150ற்கும் மேலான இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அறியப்படுகிறது. ஏனைய இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறி சுற்றிவர உள்ள காடுகளுக்குள் ஓடியுள்ளனர். இவர்கள் காடுகளில் திசை தெரியாது அலைவதாகவும் ஐவர் மட்டுமே சிறிலங்கா கெலிகாப்டர்களினால் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. விடுதலைப்புலிகள் இவர்களைத் தேடியழித்து வருகின்றனர். இவ் இராணுவ முகாமிலிருந்து அதி நவீன ஆயுதங்களும் ஆயுத தளபாடங்களும் பல கவசவாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வன்னிப்பிராந்தியத்தில் பிரதானமான இராணுவத் தளமாக விளங்கிய இப்பாரிய முகாமைக் கைப்பற்றும் போரில் 40 விடுதலைப்புலிகள் வரையில் தமது உயிரை அர்ப்பணித்துள்ளனர். இத்தாக்குதலின்போது தற்கொலைப்படைப் பிரிவைச் சோர்ந்த கரும்புலி லெப்.கேணல் போர்க் வீரமரணமடைந்துள்ளார். ஏராளமான பெண் போராளிகளும் இத்தாக்குதலில் வீரமரணமடைந்துள்ளனர்.

இப்பாரிய முகாம் கைப்பற்றப்பட்டமை, கொழும்பில் இராணுவ வட்டாரங்களுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளதாக பி.பி.சி செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள ஏனைய இராணுவ முகாம்களின் பாதுகாப்புக் குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சம் தெரிவித்துள்ளன. இச்சம்பவத்தில் 300 இராணுவத்தனர் காணாமல் போயுள்ளதாக ரஞ்சன் விஜயரத்ன பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார்.

மாங்குள இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டமை தமிழீழப் போராட்டத்தில் மாபெரும் திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மாவிட்டபு பகுதியில் வெளியேற முயன்ற இராணுவம் தடுத்து நிறுத்தப்பட்டது.

22.11.90 அன்று மாவிட்டபுரப்பகுதியிலிருந்து தச்சன்காட்டுப்பக்கமாக கவசவாகனங்களுடன் வெளியேறிய இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் தடுத்து நிறுத்தினர். தமது றொக்கெற்லோஞ்சர் தாக்குதலில் அகப்பட்ட கவசவாகனம் ஒன்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றிச் சென்றுள்ளனர். இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இம்மோதலில் கொல்லப்பட்டுள்ளனர் என சிறிலங்காவின் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விடுதலைப்புலிகள் தரப்பில் நான்கு பெண் போராளிகள் உட்பட பத்து போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

## போர்முனையில்........

24.11.90 அன்று வல்வெட்டித்துறையில் நடந்த விமானத் தாக்குதலில் தலவாக்கலையைச் சேர்ந்த ஞானம் என்னும் வீரர் வீரமரணமடைந்துள்ளார். இதே தினம் மன்னார் மாவட்டத்தில் தந்திரிமலை என்னும் இடத்தில் இருந்த மினி முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டது. இதில் ஒன்பது ஊர்காவல்படையினர் கொல்லப்பட்டனர். ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. விடத்தல் தீவைச் சேர்ந்த பிறின்ஸ் என்னும் வீரர், இத்தாக்குதலின் போது வீரமரணமடைந்தார்.

28.11.90 அன்று மாலை 6 மணியளவில் ஊர்காவல்துறையில் சின்னமூளாய் என்னுமிடத்தில் மூன்று விடுதலைப் போராளிகள் பொதுமகன் ஒருவருடன் சென்று கொண்டிருந்தபோது இராணுவத்தினர் இவர்கள் மீது பதுங்கித் தாக்குதல் மேற்கொண்டதில் எமது வீரர்களான சிறி, வதனன் ஆகிய இருவரும் வீரமரணமடைந்தனர். பொதுமகனும் உயிரிழந்துள்ளார்.

## யாழ் மாவட்டம் சகஜ நிலைக்கு திரும்புகிறது.

யாழ் மாவட்டம் தற்போது சகஜநிலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளது. தமிழ் மக்கள் தமது சராசரி அன்றாட வாழ்க்கைக்கு திரும்பத் தொடங்கியுள்ளனர். இம்மாதம் 5ந்திகதியிலிருந்து யாழ் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்களும் இயங்கத் தொடங்கி விட்டன. மாணவர்களின் வரவும் வழமைபோலவே காணப்படுகின்றது. சுற்றியுள்ள பகுதிகளில் குண்டுவீச்சுக்கள் நடந்த போதிலும் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் உள்ளத் துணிவுடன் தொடர்ந்தும் பல்கலைக்கழகத்தை நடாத்தி வருகின்றனர்.

யாழ் பிரதான வைத்தியசாலையும் இம்மாதம் 9ந் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. பொதுமக்கள் சாதாரணமாக வைத்தியசாலைக்கு போய் வரக்கூடியதாக உள்ளது.

## திருமலையில் இராணுவத்தினர் மீது தாக்குதல்

கடந்த 24.11.90 அன்று காலை திருமலை மாவட்டத்தில் சின்னயதவாச்சிக்கும், கோபுரபுரத்திற்கும் இடையில் இராணுவத்தினரைத் தாக்க விடுதலைப் புலிகள் நிலையெடுத்திருந்தனர். அவ்வேளை அங்கு வந்த இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் இராணுவத்தரப்பில் 9 பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர். விடுதலைப்புலிகளால் ஐந்து ரைபிள்கள் ஏராளமான ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டன. போராளிகள் தளம்நோக்கி திரும்பும் வழியில் நடுக்காட்டில் வைத்து இராணுவத்தினர் பதுங்கித்தாக்கினர். அப்போது ஏற்பட்ட மோதலில் லெப்டினன் அன்சார், அலெக்ஸ், சிறித், நிமால், றிச்சாட் ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர். இராணுவ தரப்பு சேதவிபரம் கிடைக்கப்பெறவில்லை.

## தமிழீழமெங்கும் மாவீரர் தினம் அனுஸ்டிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்காக தமது உயிரை அர்ப்பணித்து வீரமரணமடைந்த தியாகிகளின் நினைவு தினமான மாவீரர் தினம் தமிழீழமெங்கும் மக்களால் எழுச்சிகரமாகக் கொண்டாடப்பட்டது. வீதிகள் எங்கும் தோரணங்கள் கட்டப்பட்டும், வீதியோரங்களில் தியாகிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டும் காணப்பட்டன. பல இடங்களிலும் நினைவுக் கூட்டங்கள், கவியரங்குகள், கலைநிகழ்ச்சிகள், மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. பாடசாலைகளில் மாணவர்கள் மாவீரர் தினம் தொடர்பான சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் தாக்குதல்

23.11.90 அன்று மட்டக்களப்பு வந்தாறுமூலையில் போராளிகள் வைத்த மிதிவெடியில் மிதித்த இராணுவ வீரர் ஒருவர் தனது காலை இழந்தார். இதே தினம் மட்டக்களப்பு பஸ் நிலையத்தின் முன்பாக சென்ற இராணுவ வாகனத் தொடர் மீது விடுதலைப புலிகள் கிரனைட் தாக்குதலை மேற்கொண்டதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மட்டக்களப்பு ஆயித்திய மலையில் அமைந்திருந்த இராணு காவல் அரண்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

படிப்பகம்

www.padippakam.com

# பலவீனமானவை வெல்வதில்லை

ஒரு இனத்தின் பலமே அதன் உரிமையைத் தீர்மானிக்கின்றது. பலவீனமான உயிரினங்கள் தமது வாழ்க்கைப் போராட்டத்தில் வென்றதில்லை. பலவீனமான இனங்கள் எப்பொழுதும் தமது உரிமையைப் பெற்றதுமில்லை.

அதாவது பலவீனமான போராட்டங்கள் வெற்றி பெற்றதாகவும் இல்லை. அந்நியனோ அடக்குமுறையாளனோ ஒரு நாட்டின் அல்லது இனத்தின் பலத்தைக் கண்டு அஞ்சினானே ஒழிய ஒருவனின் நியாயபூர்வமான உரிமைகளை என்றும் மதித்ததில்லை. அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் தமது பலத்தைக் காட்டிய போதுதான் சுதந்திரநாடுகள் தோன்றின.

இதேபோன்று இலங்கையிலுள்ள தமிழர்கள் இங்கு சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் வாழ வேண்டுமெனில் அதற்கு ஒரே வழி எமது பலத்தைக் கொண்டு சிறிலங்கா இராணுவத்தை வெற்றி கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. தமிழரின் உரிமைகள் பலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டுமே ஒழிய தமிழரின் பலவீனமான நிலையில் தீர்மானிக்கக்கூடியது அல்ல.

கடந்த காலத்தில் தமிழர்கள் பலவீனமான நிலையில் பலவீனமான தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தார்கள்; இதனால் தமிழ்த் தலைவர்களும், மக்களும் தொடர்ந்து பெளத்த சிங்கள அரசாங்கங்களினால் 40 வருடங்களுக்கு மேலாக ஏமாற்றப்பட்டுக்கொண்டே வந்தார்கள். தமிழரின் பலவீனம் ஏமாற்றத்தின் வடிவமாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை அவ்வாறு இல்லை. இன்று தமிழர்கள் பெளத்த சிங்கள அரசிற்குத் தமது பலத்தைக் காட்டத் தொடங்கியுள்ளார்கள். ஆனால் சிறிலங்கா அரசு இன்றும் பழைய முறையைக் கைவிடவில்லை.

''இராணுவ ரீதியாகப் புலிகளைத் தோற்கடித்து, அரசாங்கத்தை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாது என்ற ஒரு நிலையைத் தோற்றுவித்து புலிகளை பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்'' என உயர் கல்வி அமைச்சர் லலித்தும், பாராளுமன்றப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்காவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதாவது புலிகளைத் தோற்கடித்து தாம் விரும்பிய தீர்வை தமிழர் மீது திணிப்பது, அல்லது தமிழர் மிகவும் மோசமாகப் பலவீனப் பட்டிருந்தால் உரிமையைப்பற்றிப் பேசுவதையே நிறுத்திக் கொள்வது என்பதாகும்.

இதற்காக போராட்டத்தை வழி நடத்துபவர்களை அழித்துவிடுவது அல்லது போராட்டத்தின் மையக்கருவை அழித்துவிடுவதற்கு சிறிலங்கா அரசு எண்ணுகிறது.

ஆனால் இன்று முன் எப்போதும் இல்லாதது போன்று சிறிலங்கா இராணுவம் நேரடியாக தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது. கடந்த மூன்று மாதத்திற்குள் பெரியளவிலான இழப்புக்களை முன் எப்போதும் இல்லாத அளவில் கண்டுள்ளது. மேலும் இராணுவம் தனது விருப்பத்திற்கு ஏற்ற முறையில் தொழிற்பட முடியாது முடங்கிப் போயுள்ளது. வடக்கில் தனது நடமாட்டத்தை முற்றாகவே இழந்துள்ளது. கிழக்கில் சுதந்திரமான நடமாட்டத்தை இழந்துள்ளது.

அதாவது எமது மண்ணில் அவர்கள் தமது சுதந்திர நடமாட்டத்தையும், தமது அதிகாரத்தின் பிடியையும் இழந்து வருகிறார்கள். அது எமது பலத்தினாலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது எமது விடுதலையின் முதற்படி.

சுருக்கக் கூறுவதானால் எமது சுதந்திரம் எமது பலத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பதே உண்மை.

### விலை வீழ்ச்சியால்

# தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் ஏமாற்றம்

உரும்பராய், செப். 26

தேங்காய் எண்ணெய்விலை வீழ்ச்சி அடைந்ததால் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தேங்காய் எண்ணெய் போத்தல் 60 ரூபாவாக விற்ற சமயம் பலரும் இலாபம் கருதி தேங்காயை விற்காது கொப்பராவுக்கு விட்டிருந்தனர்.

இதனால் தேங்காய் விலை சிறிது சிறிதாக உயரத் தொடங்கியது. தற்போது தேங்காய் ஒன்று 10 ரூபா முதல் 12 ரூபா வரை விற்பனை ஆகிறது.

ஆனால் தேங்காய் எண்ணெய் தற்போது போத்தல் 20 ரூபாவுக்கு வீழ்ச்சி அடைந்துவிட்டது. உள்ளூரில் பலரும் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டதும் வவுனியாவில் இருந்து தேங்காய் எண்ணெய் தாராளமாக வருவதுமே தேங்காய் எண்ணெய் விலை வீழ்ச்சிக்குக் காரணம் ஆகும்.

ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் [ணற்ற] ஐந்து தேங்காய்கள் செலவாவதாகவும் கொப்பராவுக்கு விடாமல் தேங்காயாக வைத்திருந்தால் நல்ல இலாபம் சம்பாதித்திருக்கலாம் என்றும் உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

(இ)

## சிந்தனைக்கு

''ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு எவ்வித கால வரம்பையும் நிர்ணயிக்க முடியாது. இறுதி இலட்சியத்தை அடையும்வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும் இது ஓர் மக்கள் யுத்தம்''

தலைவர் வே. பிரபாகரன்




# 391 தமிழர் ஊனமாகினர்

தமிழ்ப்பகுதிகளில் நிகழ்ந்து வந்துள்ள இராணுவத்தாக்குதல்களின் விளைவாகக் கடந்த சில வருடகாலப் பகுதியில் 391 தமிழர்கள் தம் கால், கைகளை இழந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

இவர்களில் இருபதுபேருக்கு மட்டுமே மாதாந்தம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தப்படுகின்றது எனவும் கூடிய, விரைவில் நொராட்டின் நிதியுதவி கிடைக்கப் பெற்றதும் கூடியளவில் இந்த நடவடிக்கை விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ப 11ஸ்ரீ

# கன்னாதிட்டி வங்கியில் ஓய்வூதியக் கொடுப்பனவு

மக்கள் வங்கியின் யாழ். கன்னாதிட்டிக் கிளை நேற்றுத் திறக்கப்பட்டது. சில ஓய்வூதியர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

நேற்று வங்கி திறக்கப்பட்டதும் ஏராளமான வாடிக்கையாளர்கள் அங்கு வந்து கூடினர். எனினும் குறிப்பிட்ட எண்ணிக்கையானோருக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

கன்னாதிட்டியில் இதே கிளையின் கட்டடத்தில் உள்ள மக்கள்வங்கியின் பிராந்திய அலுவலகமும் நேற்று இயங்கத் தொடங்கியது.

(உ-3)

# யாழ் பல்கலை.பீடங்கள் நவ. 5 முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், அக். 10

யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களும் நவம்பர் 5 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பிக்கும்.

நேற்றுக் காலை யாழ்-பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பல்கலைக்கழக பீடங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி சகல மாணவர்களும் நவம்பர் 5 முதல் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் (கல்வியாண்டு 89/90) இத்திகதியிலேயே விரிவுரைகள் ஆரம்பமாகும்.

சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ள வெளி மாவட்ட மாணவர்களின் நன்மை கருதியே ஒரு மாத கால தவணை வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இங்கிருந்து சென்று தென்பகுதி பல்கலைக்கழகங்களில் சேர்ந்துள்ள மாணவர்களையும் திரும்பி ஏற்றுக் கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழகம் தயாராக இருப்பதாகவும் –

ஆனால் அந்த மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடமிருந்து கடிதம் பெற்று வர வேண்டும் என்றும் –

அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை விரைவில் ஆரம்பிக்காது விட்டிருந்தால், மாணவர்கள் எண்ணிக்கை குறையும் பட்சத்தில், பல்கலைக்கழகமே மூடப்படும் சூழ்நிலை உருவாகி இருந்தது.

மின்சார வசதி, நீர்விநியோகம் ஆகியவை அற்ற நிலையிலும், மற்றும் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிக்க தற்போது முடிவாகி இருக்கிறது.

(இ-6)

# தவித்த முயல் அடிக்கும் கயவர் இன்னும் எம்மத்தியில்

யாழ்ப்பாணம், அக். 4

இத்தனை சோதனைகளின் பின்னரும், மற்றவர்களின் வேதனையில் சொந்த லாபம் தேடும் பேர்வழிகள் இன்னமும் எம் மத்தியில் வாழ்கிறார்கள்.

ஆகஸ்ட் மாத இறுதி வாரத்தில் மண்டைதீவில் இராணுவம் புகுந்ததும், அதன் பின் அங்கு நடந்த அட்டகாசங்களும், அழிப்புகளும், மக்கள் பலர் கொலையுண்டதும், ஏராளமானோர் அங்கிருந்து இடம் பெயர்ந்து வேறு கிராமங்களுக்குச் சென்றதும் கடந்து போன சம்பவங்கள்.

24-08-1990இல் அந்தக் கடற்கரைக் கிராமத்தில் இராணுவம் திடீரெனப் புகுந்ததும் மக்களில் பலரும் உடுத்த உடுப்புடன் தமது வீடுகளை விட்டு வெளியேறினர்.

இப்படி வெளியேறியவர் சிலர் பாதுகாப்பான வீடு என்று கருதப்பட்ட அயலில் உள்ள வீடு ஒன்றில் தமது பெறுமதி வாய்ந்த உடமைகளை ஒப்படைத்து விட்டுச் சென்றிருந்தனர்.

இராணுவம் மண்டைதீவு வந்தபோது அந்த வீட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் தங்கி இருந்ததால் அங்கிருந்து எந்தப் பொருளும் சூறையாடப்படவில்லை

ஆனால் இராணுவம் வெளியேறிய பின்னர் அயலவர் பலரின் பெறுமதியான பொருள்களை வீட்டுக்காரர் தமதாக்கிக் கொண்டனர்

சந்தேகம் கொண்ட பலர் வீட்டைத் திறந்து காட்டுமாறு அவரிடம் கேட்டனர் அவர் மறுத்துவிட்டார் விடுதலைப் புலிகளிடம் முறையிடப்பட்டது.

அவர்கள் வந்து சோதனையிட்ட போது பிறரின் பொருள்கள் பல அங்கிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

இராணுவம் வருவதற்கு முன்னரே பக்கத்து வீட்டுக்காரர் அவரிடம் அடைக்கலமாகக் கொடுத்த தொலைக்காட்சிப் பெட்டியின் உதிரிப் பாகங்களை மாற்றி அவர் தமதாக்கிவிட்டார்.

அந்தப் பக்கத்து வீட்டுக்காரர் இராணுவக் கெடுபிடியால் தமது குடும்ப அங்கத்தவர்கள் ஐவரை இழந்ததோடு அவரது வீடும் எரிக்கப்பட்டது.

தவித்த முயல் அடிக்கும் கயவர்கள் இன்னும் எம்மத்தியில் இருக்கவே செய்கிறார்கள்!

(அ)

# மானிப்பாய் வைத்தியசாலையில் இட நெருக்கடியால் அவதி

(மானிப்பாய்)

மானிப்பாய் வைத்தியசாலையில் நோயாளிகளின் நெருக்கடி அதிகரித்துள்ளது. இவ்வைத்தியசாலையின் சில கட்டில்களில் இரண்டு நோயாளர்கள் படுத்திருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் இருந்து அனைத்துப் பகுதிகளிலும் நெருக்கமாக நோயாளிகள் கிடத்தப்பட்டுள்ளதுடன் நடைபாதையில் செல்வோர் நோயாளிக்கு ஏற்றப்பட்டிருக்கும் சேலைன் போத்தல் தாங்கிகளைத் தட்டி வீழ்த்தும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றது நடைபாதையில் நோயாளிகள் பாய்போட்டுப் படுத்திருப்பதால் நோயாளிகளை பார்வையாளர்கள் காலால் மிதிக்கும் சம்பவங்களும் இவ்வைத்தியசாலையில் சாதாரணமாக நிகழ்ந்துவருகிறது. (லோ)

தமிழீழ விடுதலைப் புலிகள் (பிரெஞ்சுக் கிளை)
341 rue des Pyrenees, 75020 Paris
Tel : 43 58 11 42 Fax : 43 58 11 91

தொலைபேசி செய்திச்சேவை
தமிழ்: 46 36 49 49
பிரெஞ்சு : 43 58 00 25